ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2366/21 – 2024 ජනවාරි 11 වැනි බ්‍රහස්පතින්දා – 2024.01.11
2366/21 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *188 ஆம் அத்தியாயமான தொல்பொருள் கட்டளைச்சட்டம்*

### *33 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

(188 ஆம் அத்தியாயமான) தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி கே.ஏ.டி.ஆர். நிஷாந்தி ஜயசிங்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவென திருப்தியுற்று, இவ்வறிவித்தலுக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரச காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கத்துக்காக “தொல்லியல் தேவைகளுக்கான ஒதுக்கிடம்” ஒன்றாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**கே.ஏ.டி.ஆர்.நிஷாந்தி ஜயசிங்க,**
தொல்பொருள் பணிப்பாளர் தலைமையதிபதி.

கொழும்பு.
*2024. 01. 08,*

**அட்டவணை**

**தொல்லியல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட கிரலாகல நிலப் பிரதேசம்,**

வடமத்திய மாகாணம், அனுராதபுரம் மாவட்டத்தில், ஹொரவப்பொத்தானை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 119 மேல் அகுநொச்சிய கிராம அலுவலர் பிரிவில் அகுநொச்சிய கிராமத்தில் அமைந்துள்ள மில்லகஹஹேன் அல்லது நுக்கஷவத்த என

*அழைக்கப்படும் இடத்திற்கு நிலஅளவையாளர் தலைமையதிபதியின் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட முடிவுறுத்தப்பட்ட கிராம வரைபட இலக்கம் 1373, 1382 மற்றும் 1387 ஆகிய வரைபடங்களில் குறிப்பிடப்படும் நிலத்துண்டங்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட 2020.12.15 ஆந் திகதியிடப்பட்டதும், சுவடு வரைபட இல.* Aa/DSO/*2020/359 கொண்டதுமான வரைபடத்தின் பிரகாரம் இல.* A *இடப்பட்ட மு.கி.ப. 1373 இல் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 11, 12, 15, 16, 17, 18 ஆவது காணித்துண்டுகளும் இறுதி கிராம வரைபட இலக்கம் 1382 இலுள்ள 7, 8 மற்றும் 5 மற்றும் 9 ஆம் காணித்துண்டுகளின் பகுதிகளும் (மு.கி.ப 1387 இல் காணப்படும் 46, 81, 83, 84, 85, 87, 88, 89, 90, 91 ஆகிய காணித்துண்டுகள் 43, 77, 78, 79, 80, 82, 86, 135 ஆகிய காணித்துண்டுகளின் பகுதிகள் உட்பட ஐம்பத்தியிரண்டு தசம் ஏழு ஒன்பது எட்டு ஒன்பது ஹெக்டயார் (52.7989 ஹெக்டயார்) அளவான நிலப்பரப்பாகும்.*

E0G 01 - 0088